Registered No. M-4345.

யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-ம் ஞு டிசம்பர் மீ 5உ, வெள்ளிக்கிழமை. [இதழ் 38

இந்தியப் பட்டாளத்தின் வளர்ச்சி

இரண்டு வருஷ முன்னேற்றம்

ராணுவ உத்தியோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்கும் கொள்கை

மேஜர்-ஜெனரல் மோல்ஸ்வொர்த்தின் பிரசங்கம்

[பிரிட்டனுடைய பிரதம தளகர்த்தரின் உதவி தளகர்த்தராகிய மேஜர்—ஜெனரல் மோல்ஸ்வொர்த் என்பவர் சில நாள்களுக்குமுன், அகில இந்திய ரேடியோவின் டெல்லி நிலையத்திலிருந்து ஒரு முக்கியமான பிரசங்கம் செய்தார். அதில் அவர் 1941-ம் ஞூத்தில் இந்தியா யுத்தத்தில் அடைந்த வெற்றிகளைப்பற்றிக் குறிப்பிட்டு இந்தியப் பட்டாளத்தின் வளர்ச்சியைப்பற்றி விவரமாகக் கூறினர். அவருடைய பிரசங்கத்தின் சாரம் கீழே தரப்படுகிறது :—]

இந்தியாவும், சமாதானத்தை விரும்பும் இதர நாடுகளும் 1939-ம் ஞூத்தில் திடீரென்று யுத்தத்தில் அகப்பட்டுக்கொண்டன. அப்போது அவைகள் யுத்தத்திற்குத் தயாராயில்லை. ஜெர்மனியும், இத்தாலியும் எல்லாவித யுத்த முஸ்தீப்புடனும் இருந்தன. இந்தக்காரணத்தினல், மேற்கு ஐரோப்பா அவைகளால் கைப்பற்றப்பட்டது. ஆனல் பிரிட்டனும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும் தனித்து நின்று எதிரிகளுடன் போராடின. இதற்காக ஒரு பிரம்மாண்டமான யுத்த முயற்சியை அவைகள் ஆரம்பித்தன. அமெரிக்காவினுடைய பேருதவியினுலும், சாம்ராஜ்யத்திலுள்ள மூலப் பொருள்களின் சேகரிப்பினுலும், இம்முயற்சி வெற்றிகரமாக நடந்துவருகிறது. நேசதேசத்தார்களுடைய யுத்த பலம் முன்பிருந்ததைவிட எவ்வளவோ மடங்கு அதிகப்பட்டிருக்கிறது.

இந்த முயற்சியில் இந்தியா பெரும்பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறது ; அதிகப்பெருமையடையும்படியான அவ்வளவு பேருதவியைச் செய்துவருகிறது. யுத்த முஸ்தீப்பில் இந்தியா இப்போது பலமடங்கு முன்னேறியிருக்கிறது. 18 மாதங்களுக்குள், இந்தியப் பட்டாளம் விரைவாக வளர்ச்சியடைந்திருக்கிறது. இப்போது சுமார் 10 லட்சம் பேர் இந்தியப்பட்டாளத்தில் இருக்கிறுர்கள். இதில் அநேகர் யுத்த யந்திரங்களில் வேலை செய்யும் திறமையான நிபுணர்கள். சென்ற உலக மகா யுத்தத்தில் நான்கு வருஷத்தில் தயார் செய்யப்பட்ட இந்தியப் பட்டாளத்தின் எண்ணிக்கைக்கு ஏறக்குறைய இப்போதுள்ள பட்டாளம் வந்திருக்கிறது. ஆனல் இப்போது, முன்னிருந்ததைவிட, புதிய மாதிரியில் எல்லாவித யுத்த முஸ்தீப்புடன் இந்தியப்பட்டாளம் பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

1914–18 நிலைமை

இரண்டு வருஷங்களுக்கு முன் இந்தியப் பட்டாளம் இருந்த நிலைமையும், இப்போதிருக்கிற நிலைமையும் ஒத்திட்டுப்பார்த்தால், இந்திய ராணுவ பலம் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்திருக்கிறதென்று தெரியவரும். சென்ற மகா யுத்தத்தில், 10 லட்சம் சிப்பாய்களைச் சேர்த்து, பயிற்சி செய்வித்து, யுத்த முஸ்தீப்பு செய்வதில் செய்யப்பட்ட முயற்சியில் நாலில் ஒரு பாகம் இப்போது செய்யப்பட்டு இதே பலன் காணப்பட்டது; அதாவது, அவ்வளவு விரைவாக பலன் தரும்படியான வேலை செய்யப்பட்டது. 1914–18-ம் வருஷங்களில் பட்டாளத்தில் யந்திர நிபுணர்கள் நூற்றுக்கு இரண்டு பேர்தான் இருந்தார்கள் ; இப்போது 20 பேருக்கு மேல் இருக்கிறுர்கள். இந்த எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. 1918-ம் ஞூத்துக்கும் 1941-ம் ஞூத்துக்கும் மற்றெரு முக்கியமான வித்தியாசம் இருக்கிறது. அப்போது சில இந்தியர்கள்தான் 'கிங்ஸ்' கமிஷன் ஆபீசர்களாக இருந்தார்கள் ; ஆனல் இப்போது நூற்றுக்கணக்கான இந்தியர்கள் 'கிங்ஸ்' கமிஷன் ஆபீசர்களாக இருக்கிறுர்கள். இன்னும் நூற்றுக்கணக்கான ஆபீசர்கள் பயிற்சி பெற்று வருகிறுர்கள்.

1941-ம் ஞூத்தை இந்திய ராணுவ பல வளர்ச்சி வருஷம் என்று கூறலாம். ஆனல் இந்த வளர்ச்சியைப் பற்றி சந்தோஷப்பட்டுவிடுதல் கூடாது ; இன்னும் அதிகமான வளர்ச்சியை அடைவதற்கு முயலவேண்டும். இரண்டு வருஷத்தில், பல அசௌகரியங்களுக்கிடையில் இவ்வளவு முன்னேற்றமடைய முடியுமானல், அநேக சௌகரியங்களை வைத்துக்கொண்டு இன்னும் அதிக முயற்சி செய்தால், இந்தியாவின் ராணுவ முன்னேற்றம் அதிக உன்னத நிலையை அடையும் என்பதை நாம் உணரவேண்டும்.

புதிய படைத் தலைவர்கள்

இப்போது பல ராணுவப் பள்ளிக்கூடங்களிலிருந்து ஏராளமான இளைஞர்கள் பயிற்சிபெற்று வெளியில் வருகிறுர்கள். தரைப்படை, கடற்படை, விமானப் படை முதலியவைகளுக்கு பயிற்சிபெற்ற உத்தியோகஸ்தர்கள், இடைவிடாமல் வந்துகொண்டே இருக்கிறுர்கள். இவர்கள் புதிய படைகளுக்கு உத்தியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டு, புதிய படைகள் அதிகமாக வளர்ந்துவருகின்றன. இப்போது பட்டாளத்துக்கு ஆள் சேர்ப்பதின் அமைப்பு பரவப்பட்டிருக்கிறது. இதனல் பட்டாளத்தில் சேர்வது மிகவும் அதிகப்பட்டிருக்கிறது. இந்தியாவின் தென்கோடியாகிய கன்னியா குமரியிலிருந்து, வடகோடியாகிய இமாலய மலைப்பிரதேசம் வரைக்கும், ஆயிரக்கணக்கான இந்தியர்கள் பட்டாளத்தில் சேர்ந்துகொண்டு வருகிறுர்கள்.

1941-ம் ஞூத்தில் இதே மாதிரியாக ராணுவ உத்தியோகஸ்தர்களும், சிப்பாய்களும் சேர்ப்பதற்கு தகுந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 1940-ம் ஞூக் கடைசியில் எதிர்பார்த்ததைவிட அதிகமான உத்தியோகஸ்தர்களும், சிப்பாய்களும் 1941-ம் ஞூத்தில் சேர்ந்திருக்கிறுர்கள். இனிமேல், இந்தியப் பட்டாளம் மேலும் மேலும் விருத்தியடைந்து வளரவேண்டுமானல், இரண்டு முக்கியமான விஷயங்கள் கவனிக்கப்படவேண்டும். முதலாவது, யந்திரவேலை செய்பவர்கள் அதிகப்படவேண்டும்; இரண்டாவது ராணுவ உத்தியோகஸ்தர்கள் வேலைக்கு தகுதியானபேர் சேர்ந்து பயிற்சிபெறவேண்டும்.

யந்திர வேலை செய்பவர்களைப் பயிற்சி செய்விப்பதற்காக அநேக ராணுவப் பள்ளிக்கூடங்கள் இந்தியாவின் பல பாகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனல் ரயில்வேயைச் சேர்ந்த பகுதிகளில், தகுதியானபேர் இன்னும் அதிகமாகச் சேரவேண்டும்.

கஷ்டமான காரியம்

ராணுவ உத்தியோகஸ்தர்களைத் தயார் செய்வது ஒரு கஷ்டமான காரியம். இந்தக் கஷ்டம் பொது மக்களுக்கு நன்ருக விளங்குவதில்லை. இளைஞர்களுக்கு ராணுவ உடுப்பு கொடுத்து, அவர்களைப் பயிற்சிப் பள்ளிக் கூடங்களில் சேர்த்துவிடுவதால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடாது. திறமையான இளைஞர்கள் உத்தியோகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ஒரு பெரிய பட்டாளத்தை, திறமையான தலைவர்களுள்ள ஒரு சிறு படை நிர்மூலமாக ஆக்கிவிடலாம். உதாரணமாக, ஆப்பிரிக்காவில், இத்தாலியின் பெரிய பட்டாளத்துக்கு நேர்ந்த கதியைச் சொல்லலாம். இப்போது இந்தியாவின் பிரதம தளகர்த்தராயிருக்கும் ஜெனரல் வேவல் அங்கு ராணுவத் தலைவராயிருந்தார்.

ஆப்பிரிக்காவில் உள்ள இந்தியப் படைகள், பிரிட்டிஷ் படைகள், சாம்ராஜ்ய நாட்டுப் படைகள், இவைகள் அவருடைய தலைமையின் கீழிருந்தன. இவைகளைவிட அநேக மடங்கு இத்தாலியப் பட்டாளம் பெரிதாயிருந்தது. இருந்தபோதிலும், ஜெனரல் வேவல் இத்தாலியப் பட்டாளத்தை முறியடித்துவிட்டார்.

ராணுவ உத்தியோகஸ்தருக்கு வேண்டிய முக்கியமான குணாதிசயம் என்ன? தன்னுடைய சிப்பாய்களைத் திறமையாக அதிகாரம்செய்து, தான் கூறுபவைகளைப் பின்பற்றும்படி செய்தல் நம்முடைய பட்டாளத்தின் முறை; இது நமது எதிரிகளுடையதைவிட மாறுபட்டது. எதிரிப்பட்டாளங்களில், சிப்பாய்களை 'போ' என்று உத்தரவிடுவார்கள்; நாம் 'வாருங்கள்' என்று அழைப்போம். சிப்பாய்கள் தங்களுடைய தலைவர்களைப் பின்பற்றி நடப்பது என்ற கொள்கையில் நமது பட்டாளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால், தம்முடைய சிப்பாய்களின் நம்பிக்கையும் மதிப்பையும் பெற்று, எந்த நெருக்கடியான நிலைமையிலும் தம்முடைய உத்தரவுக்கும் கீழ்ப்படியும்படி செய்யக்கூடிய குணதிசயம் உடையவர்கள்தான் உத்தியோகஸ்தர்கள்.

ராணுவ உத்தியோகஸ்தர்களுக்கு தைரியம், சகோதரத்தன்மை, தங்களிடம் சிப்பாய்களுக்கு நம்பிக்கை உண்டாக்கும் திறமை, முதலிய குணங்கள் இருக்க வேண்டும். தாறுமாறான உத்தியோகஸ்தர்கள் இருந்தால் படைக்கு நஷ்டம் ஏற்படும். கவனக் குறைவினாலும், திறமையற்ற தன்மையினாலும், அவர்கள் சிப்பாய்கள் சேதமடையும்படியான காரியத்தைச் செய்யலாம். ஆகையால்தான், 'கிங்ஸ் கமிஷன் ஆபீசர்' உத்தியோகத்துக்கு தகுந்த இளைஞர்களைத் தெரிந்தெடுக்கிறார்கள். சர்வகலாசாலைப் பட்டம் பெற்றவர்களெல்லாம் ராணுவ உத்தியோகஸ்தர்களாக இருப்பதற்கு லாயக்குள்ளவர்களல்ல.

தகுதியைக் கண்டு பிடித்தல்

அப்படியானால், ஒரு படித்த இளைஞன் ராணுவ உத்தியோகஸ்தர் வேலைக்கு லாயக்குள்ளவனா, அல்லவா என்பதை எப்படி நிர்ணயிப்பது என்று கேட்கலாம். திட்டமாக நிர்ணயிக்கமுடியாது தான்; ஆனால் ராணுவத்தில் அனுபவமும் திறமையும் வாய்ந்தவர்கள் ஒரு நபரைப் பார்த்து கொஞ்ச நேரம் பேசியவுடன் ராணுவ உத்தியோகத்துக்கு உள்ள தகுதியைக் கண்டு பிடிப்பார்கள். சில சமயங்களில் அவர்களுடைய அபிப்பிராயம் தப்பாயிருக்கலாம். ஆனால் பெரும்பாலும் அது சரியாகத்தான் இருக்கிறது. தெரிந்தெடுக்கும் மத்திய சபை, அறிவு, படிப்பு, விரைவாக யோசனை செய்யும் தன்மை, உடல் வலிமை, நடவடிக்கை ஒழுங்கு, பரந்த நோக்கம், அதிகாரம் செய்யும் தோற்றம், முதலியவைகளை கவனித்து தகுந்த இளைஞர்களை ராணுவ உத்தியோகஸ்தர் வேலைக்குத் தெரிந்தெடுக்கிறது. தெரிந்தெடுப்பதில், மத்திய சபை இந்தக் குணாதிசயங்கள் ஏறக்குறைய இருப்பவர்களையும் தெரிந்தெடுக்கிறது. ஏனென்றால், தகுந்த பயிற்சி கொடுத்து பக்குவப் படுத்தப்பட்டால், இவர்களும் நல்ல உத்தியோகஸ்தர்களாகலாம்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில், ராணுவ உத்தியோகஸ்களைத் தெரிந்தெடுப்பதில், மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. ஏனென்றால், யுத்தத்தில் வெற்றியடைவது ராணுவ உத்தியோகஸ்தர்களைப் பொறுத்திருக்கிறது. அவர்கள் தகுதியானவர்களாயிருந்தால் அவர்களுடைய தலைமையின்கீழிருக்கும் சிப்பாய்கள் தைரியமாகவும் திறமையாகவும் போர் புரிவார்கள்.

இந்தியத் துருப்புகளின் வெற்றி

லிபியாவில் ஜலோவில் நடந்த சண்டை

பாலைவனத்தில் 270 மைல் நடந்து சென்ற விந்தை

[இந்தியத் துருப்புகள் லிபியாவில் ஜலோ என்ற முக்கியமான இடத்தைக் கைப்பற்றுவதற்குப் பேருதவி செய்தன. தண்ணீர் இல்லாத பாலைவனத்தில் 270 மைல் தூரம் இந்திய சிப்பாய்கள் நடந்து சென்றார்கள். ஜலோ என்ற செழிப்பான பிரதேசம் கடைசியில் கைப்பற்றப்பட்டது. இந்தியர்களுடன் கூட பிரிட்டிஷ் சிப்பாய்களும், தென்னாப்பிரிக்க சிப்பாய்களும் சென்றார்கள். ஜலோவைக் கைப்பற்றிய சம்பவத்தை ஒரு இந்திய ராணுவ நிருபர் நேரில் பார்த்தார். அதைப்பற்றி அவர் கூறும் சில விவரங்கள் பின்வருமாறு :—]

சென்ற நவம்பர் மாதம் 24-ந் தேதி, லிபியாவில் எதிரிகளுக்குள்ள முக்கியமான கொத்தளமான ஜலோவை திடீரென்று இந்தியத் துருப்புகளும், இதர நேசதேசத் துருப்புகளும் தாக்கின. எதிரிகள் இத்தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. மிகத் திறமையாகத் திட்டம்போட்டு, அருமையாக அத்திட்டத்தை நிறைவேற்றியது பாராட்டத்தக்கது. நேசதேசத் துருப்புகள் பாலைவன வழியாகச் செல்லும்போது விமானத் தாக்குதலினால் சிறிது சேதம் ஏற்பட்டது. ஜாராபூப் என்ற இடத்திலிருந்து நவம்பர் 18-ந் தேதி புறப்பட்ட துருப்புகளை எதிரிகள் 21-ந் தேதி தான் கண்டுகொண்டார்கள். அப்போதுதான் அதன் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக ஆகாய விமானங்களிலிருந்து அவர்கள் தாக்க ஆரம்பித்தார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சி பலிக்கவில்லை. முதல் தாக்குதல் ஆரம்பித்தபோது நமது துருப்புகள் ஒரு பள்ளத்தைத் தாண்டிக் கொண்டிருந்தன. யுத்த முஸ்தீப்பு வண்டிகள் பல பள்ளத்தில் சிக்கிக்கொண்டன. இம்மாதிரியான அசௌகரியமான நிலைமையிலிருந்தபோதிலும், நேசத் துருப்புகளுக்கு எதிரிகளால் பலத்த சேதம் ஒன்றும் ஏற்படுத்த முடியவில்லை. ஆனால் சிறிது நேரம் பொறுத்து, ஜெர்மன் ரேடியோவில் ஒரு பெரும் பொய் கூறப்பட்டது. 100 மோட்டார் வண்டிகளை எதிரிகள் அடியோடு அழித்துவிட்டதாக ஜெர்மன் ரேடியோ கூறிற்று. இந்தப் பொய்யைக் கேட்டதும், சிப்பாய்களெல்லோரும் சிரித்தார்கள்.

அதற்குப்பின் விமானத்தாக்குதல்கள் அடிக்கடி நடந்தபோதிலும், நேசத்துருப்புகளின் முன்னேற்றத்தை எதிரிகளால் தடுக்க முடியவில்லை. 22-ந் தேதி விமான எதிர்ப்பு பீரங்கி ஒன்று எதிரி விமானங்களைத் தாக்கி, ஒன்றை சுட்டு வீழ்த்திவிட்டது. அதற்குப்பின் எதிரிகள் ஜாக்கிரதையாக இருந்தார்கள். ஆசிலா, இகேரா என்ற இடங்கள் ஜலோவுக்கு வெளிப்பக்கத்தில் இருந்தன. அவைகள் நமது துருப்புகளால் கைப்பற்றப்பட்டன. சுமார் 100 எதிரி சிப்பாய்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள்.

எதிரிகளின் ஆச்சரியம்

அடுத்த நாள் நமது துருப்புகள் முன்னேறித் தாக்கின. பிறகு 24-ந் தேதி எதிரிகளின் கொத்தளமாகிய ஜலோ அல்லது எல் எர்க் என்ற இடம் தாக்கப்பட்டது. விடியற்காலம் மூன்று மணிக்கு, இந்தத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. பொழுது விடிகிற நேரத்தில் எல் எர்க்கின் ஓரத்தில் உள்ள பேரீச்ச மரங்களை நமது துருப்புகள் அடைந்தன. பஞ்சாபிகளும், டோக்ராக்களும் தனியாகப் பிரிந்து முன்னேறிச் சென்றார்கள். இரண்டு மூன்று மைல் தூரம் சென்ற பிறகு தான் எதிரிகள் நிலைமையை உணர்ந்தார்கள். உடனே சுட ஆரம்பித்தார்கள். நமது துருப்புகளின் வேகத்தைக்கண்டு அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். அவர்களுடைய பீரங்கி குண்டு, படம் பிடிக்கும் ஒரு இந்தியரின் 'காமரா'வைப் பழுதாக்கியதே ஒழிய வேறு யாதொரு சேதமும் உண்டாக்கவில்லை.

இந்த சமயத்தில், 9 எதிரி விமானங்கள் வந்து கீழே பாய ஆரம்பித்தன. உடனே இரண்டு "ஹரிகேன்" விமானங்கள் அவைகளின் மேல் பாய்ந்து தாக்கின. இரண்டு எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. மற்ற விமானங்கள் திரும்பி ஓடிவிட்டன.

சாயங்காலம் சுமார் 7½-மணிக்கு, நமது பீரங்கிகள் பலமாகத் தாக்க ஆரம்பித்தன. யந்திர பீரங்கிகளும் எதிரிகளை நோக்கிச் சுட்டன. ஐந்து நிமிஷம் கழித்து பீரங்கிகள் ஓய்ந்தன. உடனே இந்தியர்கள் சந்தடியில்லாமல், ஆனால் அதி விரைவாக முன்னேறிச் சென்றார்கள். எதிரிகள் சுட்டுக்கொண்டே இருந்தார்கள். திடீரென்று "யா அலி" என்ற கோரே

யுத்த முழக்கம் கேட்டது. இந்திய சிப்பாய்கள் எதிரிகளின்மேல் பாய்ந்து அவர்களைத் தோற்கடித்தார்கள். அந்த இடம் கைப்பற்றப்பட்டது. ஒரு பகுதி கோட்டையைத் தாக்கியது. அங்கும் சீக்கிரத்தில் வெற்றி முழக்கம் கேட்டது. கோட்டையும் கைவசமாயிற்று. இந்த சண்டையில் இரண்டுபேர் தான் காயமடைந்தார்கள். எதிரிகளின் வெளிப் பாதுகாப்புப் படைகள் நன்றாகச் சண்டை செய்தன. ஆனால் கோட்டை யாதொரு சண்டையுமில்லாமல் சரணாகதியடைந்தது.

லாப நஷ்ட விபரம்

நான்கு பிரிட்டிஷ் ராணுவத் தலைவர்கள் கோட்டைக்குள் சென்று 70 இத்தாலிய ராணுவத் தலைவர்களையும், சிப்பாய்களையும், ஒரு வார்த்தைகூட பேசாமல், கைதிகளாகப் பிடித்துக்கொண்டார்கள்.

ஜலோ சண்டையில், 700 இத்தாலியர்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். 28 பிரேடா பீரங்கிகள், இரண்டு யுத்தகள பீரங்கிகள், அநேக யந்திர பீரங்கிகள் கைப்பற்றப்பட்டன. நமது துருப்புகளில் காயமடைந்தவர்களும், இறந்துபோனவர்களும் மொத்தம் 20 தான்.

இந்திய சிப்பாய்கள் தங்களுடைய வெற்றியைக் குறித்து பெருமையாயிருக்கிறார்கள். ஏனென்றால், சிறிது நஷ்டத்துடன் ஒரு பெரிய வெற்றியை அவர்கள் அடைந்திருக்கிறார்கள்.

ஜப்பான் புதிய யுத்தம் தொடங்குமா?

எதிர்த்துப் போராட தகுதியான ஏற்பாடுகள்

அமெரிக்க—ஜப்பானிய சமரசப் பேச்சுகள்.

ஜப்பானிய சக்கிரவர்த்தியின் பொறுப்பு.

சென்ற வாரம், தூரக்கிழக்குப் பிரதேசம் சம்பந்தமாக பேச்சுகளும், வதந்திகளும், பயமுறுத்தல்களும் பலமாயிருந்தன. ஜப்பானின் ஸ்தானீகர், அட்மிரல் நோமுராவும், ஜப்பானின் பிரத்தியேக தூதர், மிஸ்டர் குருசுவும் அமெரிக்கத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட்டையும், அவருடைய அரசாங்க மந்திரியாகிய மிஸ்டர் கார்டெல் ஹல்லேயும் சந்தித்துப் பேசினார்கள். அமெரிக்க அரசாங்கம் தன்னுடைய அபிப்பிராயங்கள் குறிக்கப்பட்ட ஒரு அறிக்கையை அவர்களிடம் கொடுத்திருக்கிறது. அதற்கு ஜப்பான் இதுவரையில் பதிலளிக்கவில்லை. ஜப்பானின் மந்திரி சபை, பேச்சுகளை நடத்திக்கொண்டே போகும்படி தனது தூதர்களுக்கு அறிவித்திருக்கிறது. இதனுடைய முடிவு என்னாகுமோ தெரியவில்லை. காலதாமதம் செய்துகொண்டே வந்தால், ஜப்பான் தன்னுடைய புது தாக்குதல் ஏற்பாடுகளுக்கு சௌகரியம் என்ற எண்ணத்துடன் நடந்து வருவதாகத்தெரிகிறது

இப்போதுள்ள நிலைமை நெருக்கடியாயிருக்கிறது என்பதை எல்லோரும் உணருகிறார்கள். பிரிட்டனுக்குச் சென்றிருந்த லார்டு ஹாலிபாக்ஸ் (அமெரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர்) அமெரிக்காவுக்குத் திரும்பிவிட்டார். ஒய்வெடுப்பதற்காக சில நாள்கள் ''வார்ம்ஸ்பிரிங்ஸ்'' என்ற ஊருக்குச் சென்றிருந்த பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட், தலைநகரத்துக்குத் திரும்பிவிட்டார். அரசாங்கத் தலைவர்களுடனும், ராணுவத் தலைவர்களுடனும் அவர் இப்போது கலந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

இண்டோ-சீனாவுக்கு 'சப்ளை' சாமான்கள் அனுப்புவதை ஜப்பான் நிறுத்தியிருக்கிறது. இதனால், ஜப்பான் சீக்கிரத்தில் ஒன்றும் செய்யாது என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் இதற்கு முன்னேயே இண்டோ-சீனாவின் மேற்கு எல்லையில், ஜப்பான் தன்னுடைய துருப்புகளைச் சேகரித்து வைத்திருக்கிறது; முக்கியமான துறைமுகங்களைத் தன் வசப்படுத்தியிருக்கிறது; இதல்லாமல் ஒரு பெரிய விமானப்படையும் அங்கு வைத்திருக்கிறது. பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் ஜப்பானை ஒரு கேள்வி கேட்டிருக்கிறார். சமாதான ஒப்பந்தப்பேச்சுகள் நடந்து கொண்டிருக்கும்போது ஏன் அதிகமான துருப்புகளை ஜப்பான் இண்டோ-சீனாவுக்கு அனுப்பியிருக்கிறது என்று அவர் கேட்டார். அதற்கு, தான் எந்த கெட்ட எண்ணத்துடனும் அப்படிச் செய்யவில்லை என்று ஜப்பான் கூறியிருக்கிறது. அச்சு நாட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஜப்பான் கூறுவதொன்றையும் நம்புவதற்கில்லை.

ஜப்பானுடைய நோக்கம்.

ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் நடக்கும் ஒப்பந்தப் பேச்சுகள் வெற்றிகரமாக முடியுமா என்பது சந்தேகம். ஜப்பானியப் பத்திரிகைகளும், ஜப்பானிய அரசியல் தலைவர்களும் எழுதுவதையும், பேசுவதையும், பார்த்தால் இந்த சந்தேகம் ஊர்ஜிதப்படுகிறது. ஜப்பானிய முதல் மந்திரி சமீபத்தில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார். பிரிட்டனும், அமெரிக்காவும், தூரக்கிழக்குப் பிரதேசத்தில் தலையிடுவதை ஒழிக்கவேண்டும் என்று அவர் கூறினார். ஜப்பான் தன்னுடைய இஷ்டத்தின்படி தான் நடக்கும் என்று வற்புறுத்திக் கூறப்படுகிறது.

ஜப்பான் ஒரு பெரிய தப்பு செய்யப்போகும் நிலைமையில் இருக்கிறது. இப்போது அதிகாரத்திலுள்ளவர்களில் பெரும் பாலோர் ஜப்பானின் அதிக்கிரமத்தை ஆதரிக்கிறார்கள். ஆனால் அனுபவம் மிகுந்த சிலர் ஜப்பான் புதிய யுத்தத்தில் இறங்குமானால் அது தனக்குப் பெருந்தீங்காக முடியும் என்று நம்புகிறார்கள். இந்த நிலைமையில், ஜப்பானிய சக்கிரவர்த்திதான் ஜப்பானை யுத்தத்திலிருந்து காப்பாற்ற முடியும் என்று ''ஓரியண்டல் அபேர்ஸ்'' என்ற ஷாங்காய் பத்திரிகை கூறுகிறது.

அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் உள்ள அபிப்பிராய பேதங்களில் முக்கியமானது சீனாவைப்பற்றிய பிரச்சினை. ஜப்பான் சீன யுத்தத்தை நிறுத்தாவிட்டால், யாதொரு ஒப்பந்தமும் செய்ய முடியாது என்று அமெரிக்கா திட்டமாய்க் கூறியிருப்பதாகத் தெரிகிறது. எது எப்படி நடந்தாலும், அமெரிக்கா பிரிட்டன், சீனா, டச்சுத் தீவுகள், ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து முதலிய நாடுகள் யுத்தத்திற்குத் தயாரான ஏற்பாடுகளெல்லாம் செய்திருக்கின்றன. இவைகளை எல்லாம் எதிர்த்துப் போர் புரிவதற்கு ஜப்பான் பலதடவை யோசனை செய்ய வேண்டும். இனிமேல் ஜப்பான் அதிக்கிரமமான காரியம் எது செய்தாலும், அதை அடக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவை பின்வருமாறு:—

(1) நெருக்கடியான நிலைமையில் நடக்கவேண்டிய பல விஷயங்களுக்கு தாய்லாந்து தகுந்த ஏற்பாடுகளுடன் இருக்கிறது.

பர்மா ரோட்டு பாதுகாப்பு.

(2) பர்மா ரோட்டைப் பாதுகாப்பதற்காக முக்கியமான இடங்களில் ஆகாய விமானச் சாலைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒருவேளை ஜப்பான் பர்மா ரோட்டைத் தாக்குமானால், அதைத் தடுப்பதற்காக அமெரிக்கா தன்னுடைய விமானங்களை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது.

(3) பர்மா யுத்த முஸ்தீபுடன் தயாராக இருக்கிறது. அதனுடைய தரைப் பாதுகாப்புகளும், ஆகாய விமானப் பாதுகாப்புகளும் பலப்படுத்தப் பட்டுள்ளன.

(4) சிங்கப்பூரில், நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று பிரகடனம் செய்யப்பட்டது. சிங்கப்பூரிலும், ஹாங்காங்கிலும் உள்ள துருப்புகள் அங்கேயே தங்கி யிருக்கவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. மலேயாவில் பிரிட்டிஷ் துருப்புகள் தயாராயிருக்கின்றன. கடைசியாக, இந்தியாவிலிருந்து ஒரு பெரிய பட்டாளம் வந்து சேர்ந்திருக்கிறது. பிரிட்டிஷ் கடற்படையின் ஒரு பிரிவு சிங்கப்பூருக்கு வந்து சேர்ந்திருக்கிறது.

(5) பிலிப்பைன் தீவுகளில், சிப்பாய்களுக்குக் கொடுத்த 'லீவு' ரத்து செய்யப்பட்டது. அமெரிக்கக் கடற்படையின் ஒரு பாகம் மணிலாவில் இருக்கிறது.

(6) ஹாவேயிலிருந்து ஆஸ்திரேலியா வரைக்கும், பசிபிக் கடலில் 5,000 மைல் தூரத்தில் உள்ள முக்கியமான இடங்களில் தளங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று, அமெரிக்காவும் பிரிட்டனும் முயற்சி செய்கின்றன.

(7) ஆஸ்திரேலியாவும், நியூஜிலாந்தும் நெருக்கடியான நிலைமையை உணர்ந்து தகுந்த ஏற்பாடுகள் செய்துள்ளன.

ஆஸ்திரேலியாவின் யந்திர "குதிரைப்படை"

சென்ற உலக மகாயுத்தத்தில் தைரியத்தினாலும், திறமையினாலும், ஆஸ்திரேலிய குதிரைப்படை மிகுந்த பேரும் புகழும் பெற்றது. நண்பர்களும் எதிரிகளும், ஆச்சரியப் படும்படியாக, யுத்தகளத்தில் போர் செய்தது. இப்போது நடக்கும் யுத்தத்தில் கலந்துகொண்டிருக்கும் ஆஸ்திரேலியர்கள் அதேமாதிரியான தைரியமும், திறமையும் உடையவர்கள் ; ஆனால் அவர்களுடைய "குதிரை" 'டாங்கி'கள்தான். ஆஸ்திரேலிய 'டாங்கி'ப்படையின் ஒரு பாகம் வேவு பார்க்கும் வேலை செய்துவிட்டு திரும்புவதை மேலே படத்தில் காணலாம்.

வாரச் செய்திக் குறிப்புகள்

1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் விமானப்போர்

பிரிட்டிஷ் விமானப்படை சென்ற வாரத்தில் வட மேற்கு ஜெர்மனியில் உள்ள முக்கிய லட்சியங்களின் மேல் குண்டுகளைப்போட்டது. தூசல்தார்ப்பிலுள்ள ரயில்வேக்களும், கைத்தொழிற்சாலைகளும், ஆஸ்டெண்ட் துறைமுகத்திலுள்ள கப்பற்சாலைகளும் பலமாகத் தாக்கப்பட்டன. ஹாம்பர்க் துறைமுகம் மிகவும் பலமாகத் தாக்கப்பட்டது. 150 டன் எடையுள்ள குண்டுகள் ஹாம்பர்க்கில் உள்ள கப்பற்சாலைகள்மேல் போடப்பட்டன. அந்தத் துறைமுகத்திற்கு அருகிலுள்ள கடலில், நீர்க்குண்டுகளை பெருவாரியாக பிரிட்டிஷ் விமானப்படை வைத்திருக்கின்றது. இதனால் கப்பல்களும், சப்மரீன்களும், அந்த துறைமுகத்தைவிட்டுப் புறப்பட்டுப் போகமுடியாதபடி தடுக்கப்பட்டிருக்கின்றன.

சென்ற ஜனவரிமீ த்திலிருந்து அக்டோபர்மீ முடிய ஜெர்மனியிலும், ஜெர்மன் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளிலும், ஜெர்மனி 1,426 ஆகாய விமானங்களை இழந்திருக்கிறது. பிரிட்டன் 1,311 விமானங்களை இழந்திருக்கிறது. மத்திய கிழக்கு அரங்கத்தில் ஜெர்மனி 617 விமானங்களையும், பிரிட்டன் 378 விமானங்களையும் இழந்திருக்கின்றன. சென்ற பத்து மாதங்களில் ஜெர்மனி இழந்த விமானங்களின் மொத்தம் 2,053 ஆகிறது ; பிரிட்டன் இழந்தது 1,685 ஆகிறது. நடந்த விஷயம் இப்படி இருக்க ஜெர்மன் அறிக்கை வேறுவிதமாகக் கூறுகிறது. ரஷ்ய யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது, பிரிட்டன், ஜெர்மனியில் சேதமொன்றும் உண்டாக்கவில்லையென்றும், இந்த வருஷ ஆரம்பத்திலிருந்து 2,501 விமானங்களை பிரிட்டன் இழந்ததென்றும், ஜெர்மனி 602 விமானங்கள்தான் இழந்ததென்றும் கூறப்படுகிறது. ஜெர்மன் விமான நஷ்டத்தை மூன்றில் இரண்டு பங்கு குறைத்தும், பிரிட்டிஷ் விமான நஷ்டத்தை நூறில் 50 பங்கு அதிகமாக்கியும் ஜெர்மனி திரித்துக் கூறுகிறது. மே மாதத்திலிருந்து சென்றவாரம் வரையில் பிரிட்டன்மேல் பிரமாதமான சேதம் விளைவிக்கக் கூடிய குண்டுகள் ஒன்றும் போடப்படவில்லை. சென்ற ஆறு மாதங்களாக பிரிட்டிஷ் விமானப்படை 20,000 டன் எடையுள்ள குண்டுகளை ஜெர்மனியின்மேல் போட்டது. யுத்த ஆரம்பத்திலிருந்து இதுவரையில், அதாவது நவம்பர்மீ முடிய, 6,166 ஜெர்மன் விமானங்கள் அழிக்கப்பட்டன. இதில், மத்திய கிழக்கு அரங்கத்திலும், போலந்திலும் அழிக்கப்பட்ட விமானங்களும், டச்சு, பெல்ஜியன், பிரெஞ்சு துருப்புகளால் அழிக்கப்பட்ட அச்சு விமானங்களும் சேர்க்கப்படவில்லை.

தென் மேற்கு இங்கிலாந்திலும், தென் வேல்ஸிலும், வடஅயர்லாந்திலும் விரோதி விமானங்கள் சில குண்டுகளைப்போட்டன. சேதமொன்றுமில்லை. தென் வேல்ஸில் மாத்திரம் சொற்பசேதம் உண்டாயிற்று. ஒரு விரோதி விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது.

2. ஆப்பிரிக்காவும், மத்திய தரைக் கடலும்

கோண்டார் வீழ்ச்சி

அபிசீனியாவிலுள்ள கோண்டார் கோட்டையை இத்தாலியர் பலமாகப் பாதுகாத்து வந்தனர். அவர்கள் இந்த இடத்தைப் பலப்படுத்த ஆறு மாதங்களாக வேலை செய்தனர். இருந்தாலும் சென்ற 15 நாள்களில் நேசதேசத்துருப்புகள் கோண்டார் கோட்டையை முற்றுகை போட்டுக் கடைசி அரை நாளில் பலமாகத் தாக்கிப் பிடித்துக்கொண்டன. சண்டை மலைப்பிரதேசத்தில் சமுத்திர மட்டத்திற்கு 7,000 அடி உயரமான இடத்தில் நடந்தது. இதில் தரைப்படையும், ஆகாயப்படையும் சேர்ந்து உழைத்தன. இத்தாலிய ஜெனரல் வாசி என்பவர் சென்ற வியாழக்கிழமை பகல் 2-மணிக்கு தன் துருப்புகளுடன் பிரிட்டிஷாரிடம் சரணாகதி அடைந்தார். 11,500 இத்தாலியர்களும், 12,000 சுதேசி துருப்புகளும் கைதியாக்கப்பட்டனர்.

லிபியா பாலைவனத்தில், காம்பட் துறைமுகத்திற்கு சுமார் 20 மைல் தென்மேற்கில், பலமான புதிய டாங்கி யுத்தம் நடக்கின்றது. லிபியா யுத்தத்தில் உள்ள துருப்புகளில் 100-க்கு 70 பேர் பிரிட்டனிலிருந்து அனுப்பப்பட்டதாக பிரிட்டிஷ் சமாச்சார மந்திரி பிரெண்டன் பிராக்கென் தெரிவித்தார்.

தோப்ரூக்கை பலப்படுத்தல்

தோப்ரூக்கில் யுத்த முஸ்தீப் பலப்பட்டு வருகிறது. தோப்ரூக்கின் தென்மேற்கில் ஜெர்மன் காலாட் படையையும், பீரங்கிகளும் நம்முடைய துருப்புகளை

எதிர்க்கின்றன. தோப்ருக்கிலிருந்து வந்த பிரிட்டிஷ் டாங்கிப் படை எட் டூடா என்ற இடத்தைப்பிடித்து விட்டது. தென்கிழக்கிலிருந்து வரும் நியூஜிலாந்து (நேச தேசத்) துருப்புகளுடன் சேருவதற்கான முயற்சி செய்யப்பட்டு வருகிறது. மார்டோபா, பார்டியா—தோப்ருக் மோட்டார் போக்குவரத்துப் பாதைகள் பிரிட்டிஷ் விமானப்படையால் பலமாகத் தாக்கப்பட்டன. விமானப்படை, தரைப்படைக்கு ஒத்தாசை செய்கின்றது. இதனல் விரோதிகள் மோட்டார் மூலமாகத் துருப்புகளும் சாமான்களும் வேறிடத்திற்கு கொண்டுபோவது தடைப்பட்டிருக்கிறது. சிடி ரெஸேகிற்கு தென்மேற்கில் கலைக்கப்பட்ட ஜெர்மன், இத்தாலிய துருப்புகள் மறுபடியும் ஒன்ருக சேர்ந்து தென்மேற்காகப்போய்க் கொண்டிருக்கின்றன. மறுபடியும் சண்டை மும்முரமாக நடக்கிறது. இருபக்கங்களிலும் சளைக்காமல் சண்டை நடக்கின்றது. சிடி ஓமார் நூவோவைப் பிடித்த இந்திய துருப்புகள் 700 இத்தாலியர்களைக் கைதியாகப் பிடித்தன. அந்த பிரதேசத்திலுள்ள இத்தாலியர்களை கொஞ்சம் கொஞ்சமாக வெளியேற்றிவிட்டன. பிரிட்டிஷ் துருப்புகள் பீர் எல் ஹமீத் என்ற இடத்திற்கு வடக்கில் ஒரு முக்கிய இடத்தைக் கைப்பற்றி நூற்றுக்கணக்கான இத்தாலியர்களைப் பிடித்திருக்கின்றனர். ரோமெல் துருப்புகளுக்காக, 10,000 டன் எடையுள்ள பெட்ரோலும் யுத்த தளவாடங்களும் வெடிமருந்துகளும் ஏற்றிச்சென்ற இரண்டு இத்தாலிய சப்ளை கப்பல்கள் பிரிட்டிஷ் விமானப்படையால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டன.

நாஸித்துருப்புகளை ஆப்பிரிக்காவிற்கு அனுப்புவதற்காக இத்தாலியில் உள்ள பிரிண்டிஸி, நேபிள்ஸ் நகரங்களுக்கு துரிதமாக அனுப்பப்படுகின்றன; கிரீஸிலுள்ள சலோனிகா பட்டணத்திற்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன. நாஸி ஜெனரல் ரோமெல் துருப்புகள் மீண்டும் சிடி ரெஸேக்கையும், பீர் எல் ஹமீத்தையும் கைப்பற்றிக்கொண்டன என்று தெரிகிறது.

லிபியா டாங்கிச் சண்டை

இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் லிபிய யுத்தமானது அங்கங்கே தனித்தனியாக டாங்கிகள் டாங்கிகளோடு மோதும் சண்டையாகும்.

இதுவரை நடந்த ஒவ்வொரு டாங்கிச் சண்டையிலும் பிரிட்டிஷார் ஜெர்மானியரைத் தோற்கடித்திருக்கிருர்கள். இரண்டு பக்கமும் பெருத்த டாங்கிச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆனல் ஜெர்மானியருக்கு பிரிட்டிஷாருக்கு ஏற்படுவதைவிட மூன்று மடங்கு நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதோடு யுத்த களம் நம்வசத்தில் இருப்பதால் சேதமடைந்த டாங்கிகளை நாம் பழுதுபார்க்க முடிகிறது. சாதாரணமாக இரண்டு கட்சி டாங்கிகளுக்குமிடையே 300லிருந்து 800 கஜ தூரமிருக்கிறது. சில சமயங்களில் 1,200 கஜ தூரமும் இருப்பது உண்டு. கடற் சண்டையில் உள்ளதுபோல் வேகம், சுடும் பலம், தளவாட பலம் இவை மூன்றும்தான் முக்கியமான விஷயங்கள். இந்த விஷயத்தில், அமெரிக்க டாங்கிகள் ஜெர்மன் டாங்கிகளைவிடச் சிறந்து விளங்குகின்றன. இந்த நடவடிக்கைகளில் ஆள் சேதம் மிகவும் குறைவு. டாங்கிக்கு அடிபட்டாலும் ஆட்கள் தப்பித்துக்கொண்டு விடுவார்கள்.

இதுவரையில் எதிரியின் டாங்கிகள் எத்தனை நாசமாக்கப்பட்டிருக்கின்றன? இது விஷயமாக இந்த நிமிஷம்வரை எவ்வளவு நாசமாயிற்று என்று அவ்வளவு கணக்காகச் சொல்லமுடியாது. ஆனல் கெய்ரோவிலிருந்து கிடைக்கும் ஒரு மதிப்பிலிருந்து நாம் எதிரியின் டாங்கிகளில் மூன்றில் ஒரு பங்கை அழித்துவிட்டோம் என்று தெரிகிறது. இப்பொழுது எதிரியின் டாங்கி நாசம் இதற்கும் அதிகமாகவே இருக்கவேண்டும். ரோமலின் டாங்கிகள் பாதி அழிக்கப்பட்டுவிட்டன என்று ஒரு அறிக்கை கூறுகிறது.

திருப்திகரமான ஆரம்பம்

லிபிய யுத்தத்தில் ஆரம்பம் மிகவும் திருப்திகரமாயிருந்ததால், சீக்கிரம் யுத்தம் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கக்கூடாது. மகத்தான பாலைவன டாங்கிச் சண்டை நடந்துகொண்டிருக்கிறது. இது விஷயமாக "நியூஸ்கிரானிகள்" ராணுவ நிபுணர் எழுதுவதாவது:—"லிபியாவில் இரண்டு பக்கமும் பெருத்த சேதம் ஏற்படும். இந்த நடவடிக்கையின் நோக்கம் எதிரி பாலைவனத்தில் வைத்திருக்கும் கவசம் பூண்ட படைகளை சீக்கிரம் அழிக்கவேண்டும் என்பதுதான். ஆனல் இவ்வளவு பெரிய நோக்கம் மிக எளிதில் நிறைவேறிவிடும் என்று நினைப்பது தவறு."

"டெய்லி டெலக்ராப்" ராணுவ நிருபர் எழுதுவதாவது:—"தோப்ருக்கில் இருந்த பிரிட்டிஷ் துருப்புகள் இந்த யுத்தத்தில் வெகுவாகப் பங்கெடுத்துக் கொண்டிருக்கிருர்கள். ஆனல் எல்லாம் நமக்குக் கிடைக்கும் ராணுவ தந்திர வெற்றியைப் பொறுத்திருக்கிறது. வட ஆப்பிரிக்காவில் உள்ள அச்சுப் படைகளை அழிப்பது சாத்தியம் என்றே தோன்றுகிறது. ஆனல் இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் பெரிய போர்தான் வெற்றி—தோல்வியை நிச்சயப்படுத்தும்."

இதற்கிடையில் விஷயங்களின் தராதரம் தெரிந்திருப்பது நல்லது. இப்போதைய பிரம்மாண்டமான யுத்தத்தில் லிபியப் போர் ஒரு பக்கம்தான். ரஷ்ய முனையில் நடந்துகொண்டிருக்கும் யுத்தம், பசிபிக்கில் ஏற்படக்கூடிய யுத்தம். விஷிக்கும், பெர்லினுக்கும் சமீபத்தில் நடந்த சமரசம், ஆகிய இவை யுத்தத்தை வெகுவாகப் பாதிக்கலாம். இன்னும் பாலஸ்தீன், சிரியா, பாரசீகம், காகசஸ், பிரெஞ்சு வட ஆப்பிரிக்கா ஆகிய இப் பிரதேசங்களையும் நாம் மறக்கக்கூடாது. இந்த எல்லாப் பிரதேசங்களிலும் முக்கிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

கன்னிங்காமின் திறமை

தற்போது தலைமை வகித்து நடத்தும் விமானப் படை வைஸ் மார்ஷல் அனுபவம் மிகுந்தவர்; யுத்த தந்திரங்களுக்குப் பேர் போனவர். 1914-18-ல் விமானியாயிருந்தபோது, மிகவும் அபூர்வமாய்க் கிடைக்கும் விமானப்படை க்ராஸ் உட்பட சகல விருதுகளும் அவருக்குக் கிடைத்தன. இந்தப் போராட்டத்துக்கு முன்னதாகச் சரியான திட்டம் போட்டு, நடத்தி வந்ததிலிருந்தே நிலைமையைக் கணிப்பதில் அவருக்குள்ள திறமை விளங்குகிறது.

புதிய யுத்தமுறைகள்

லிபியப் போராட்டம் ஜெனரல் கன்னிங்காமின் தலைமையின்கீழ் நடக்கிறது. ஜெர்மன் கவசப் படைகளை அழித்தொழிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் வேலைசெய்துவருகிருர். ஸிடி ரெஸேக் என்னுமிடத்தில் அச்சு வசத்திலிருந்த இறங்குமிடத்தைக் கைப்பற்றியது பிரிட்டிஷ் முன்னேற்றம் மின்னல் வேகத்தில் நடக்கிறதென்பதைக் காட்டுகிறது. அங்கே விமானிகளும் தரைச் சிப்பந்திகளுமாக 50 எதிரிகள் திடீரென்று விமானக் கூடத்திலேயே பிடிக்கப்பட்டனர். ஜெனரல் கன்னிங்காமின் கவசப் படைகள் எத்தனையோ புதுயுக்திகளையும் தந்திரங்களையும் கையாண்டு வருகின்றன. ஒவ்வொரு அச்சு கோஷ்டியையும் ஒன்று திரட்டி, நேருக்கு நேர் கொண்டு வந்து தோற்கடிக்கக்கூடிய விதமாக தந்திரங்கள் செய்யப்படுகின்றன.

விமான நிலை

இப்போது லிபியாவில் உள்ள விமான நிலை, கிரேக்கப் போரிலும் க்ரீட் போரிலும் இருந்ததற்கு நேர் மாருய் இருக்கிறது. எதிரி விமானங்கள் இல்லவே இல்லையென்று கூடச் சொல்லலாம். லிபியாவிலிருந்த ஜெர்மன் விமானங்களில் பெரும் பாகத்தை, அவை மேலே கிளம்புமுன்னமே, சாம்ராஜ்ய விமானப்படைகள் அழித்துவிட்டன. பிரிட்டிஷ் விமானப் படை இதுவரை மத்தியக் கீழ்த் திசையில் உபயோகிக்கப்பட்டதையெல்லாம் விடப் பெரிதாயிருக்கிறது. எதிரிகளுடைய 'யுங்கர்-87' பாய்ச்சல் விமானங்களை என்ன செய்வது என்று தங்களுக்குத் தெரியுமென்பதை பிரிட்டிஷ் சண்டை விமானங்கள் காட்டிவிட்டன. அங்கங்கே தனித்து நின்று கிடக்கும் தங்கள் படைப் பிரிவுகளுக்குப் போக்குவரத்து விமானங்கள் மூலம் 'சப்ளை' கள் கொண்டு சேர்க்க ஜெர்மானியர் முயற்சிசெய்கிருர்கள். ஆனல் பிரிட்டிஷ் விமானங்கள் அந்த முயற்சிகளைப் பாழாக்கிவருகின்றன.

உக்கிரமான டாங்கிச் சண்டை

லிபியாவில் நடந்த 'டாங்கி' ச் சண்டை ஒன்றை நேராகப்பார்த்த 'டெய்லி மெயில்' நிருபர் பின்வருமாறு கூறுகிருர்:—

"நான் முன்னணிக்குப் போனபோது போராட்டத்தின் முதல் குண்டுகள் ஒலித்துக்கொண்டிருந்தன. தங்கமயமாய்க் காய்ந்துகொண்டிருந்த மஞ்சள் வெயிலில், வரிசையாய் நின்றுகொண்டிருந்த ஜெர்மானியரைத் தாக்குவதற்காக, அமெரிக்க 'டாங்கி' கள் கலகலப்புச் சப்தத்துடன் விரைந்தோடிக்கொண்டிருந்தன.

"கெய்ரோவிலுள்ள அமெரிக்க ராணுவப் பிரதிநிதியான கர்னல் பான்னர் பெல்லர்ஸ் மூக்குக் கண்ணாடியணிந்து, இந்த 'டாங்கி' கள் இப்படியும் அப்படி

யும் நெளிந்தோடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவைகள் போகும் வழியில் பின்னாலிருந்து புகைப்படலம் கிளம்பிக்கொண்டிருந்தது. எதிரிகளைத் தேடுவதுபோல் பீரங்கிக் குழாய்கள் அசைந்து கொண்டேயிருந்தன. இப்படி அவை போராட்டத்துக்குப் புறப்பட்டன. இரு புறங்களிலும் தூசி வானத்தை நோக்கி எழுந்துகொண்டிருந்தது. அந்த மணல் பரப்பைக் கௌவிக்கொண்டே டாங்கிகள் சென்றன.

இரவெல்லாம் 'பாண வேடிக்கை'.

"அன்றிரவு ஜெர்மானியர் போய் அடங்கியபோது அவர்களுடைய 100 டாங்கிகளில் 15 அழிக்கப்பட்டன. இரவெல்லாம் வெள்ளிபோல் பிரகாசிக்கும் குண்டுகள் வானத்தில் பாய்வதும் விழுவதுமாயிருந்தன. இருந்திருந்து பளிச்சென்று கிளம்பும் ஆரஞ்சு நிற வெளிச்சத்திலிருந்து பீரங்கிகள் குண்டுகள் வெடிப்பது 'பாணங்கள்' வெடிப்பது போலிருந்தது. தூரத்திலே டாங்கிகளும் வண்டிகளும் போகும் கலகலப்பு சப்தத்திலிருந்து, இரு தரப்பாரும் மறுநாள் காலைப் போருக்குப் பலம் திரட்டிக்கொண்டிருந்தார்களென்று தெரிந்தது.

"வானம் வெளுத்த உடனே நாங்கள் எழுந்துவிட்டோம். பொழுதுபுலர்ந்து, அந்தப் பாலைவனமெங்கும் வெளிச்சம் பாய்ந்தபோது மீண்டும் போராட்டம் நடந்துகொண்டிருந்தது. அந்தப் புகைப் படலமும் அந்த இடி முழக்கமும் பல மைல் தூரம் செல்வதுபோல் தோன்றியது. காலையில் உணவு முடிந்த மூன்று மணி நேரத்துக்கெல்லாம், போருக்கென்று புறப்பட்டு வந்த 100 ஜெர்மன் டாங்கிகளில் நாசமாகாது மிச்சமிருந்தவை பார்டியாவை நோக்கிப் பின்வாங்கி ஓடிப்போய்க்கொண்டிருந்ததாகத் தெரிந்தது. அமெரிக்க 'டாங்கி'கள் தங்கள் முதல் போராட்டத்தில் நல்ல வெற்றி பெற்றன.

ஜெர்மானியர்கள் நிலைமை

ஜெர்மானியர்கள் லிபியாவில் எக்கச்சக்கமாய் மாட்டிக்கொண்டு இருக்கிறார்களென்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் போராடித் தப்பித்துக் கொண்டு வெளியேறி விடுவார்களா அல்லது கடைசி வரை போரை நடத்திப் பார்ப்பார்களா, என்று இன்னும் திட்டமாய்ச் சொல்ல முடியாது. யுத்த முறைப்படிப் பார்த்தால் அவர்கள் வெளியேறுவதற்கு வழிதேடுவது சாத்தியமாய்த்தானிருக்கும். ஜெனரல் ஆக்கின்லெக்கின் சிப்பாய்கள் இரண்டாவது லிபியப் போராட்டத்தில் நிதானமாக வெற்றி பெற்றுக்கொண்டு வருகிறார்கள். இது கெய்ரோவிலுள்ள ராணுவ வட்டாரங்களின் அபிப்பிராயம். கவசப் படைகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் இந்தப் பெரும் போராட்டத்தினால் நிச்சயமாய் இரண்டிலொன்று தீர்ந்துவிடும் என்று அவர்கள் கருதுகிறார்கள். இந்தப் போராட்டத்தில் நமது படைகள் வெற்றி பெற்றுவிடும் பட்சத்தில்—வெற்றி என்றால் ஏதோ சில பிரதேசங்களைப் பிடிப்பது மட்டுமல்ல; எதிரியின் கவசப் படைகளை அழித்தொழிப்பதுதான்—அப்புறம் அதிக கஷ்டமிராதென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் மிச்சமிருப்பவர்கள் பெரும்பாலும் இத்தாலியர்கள்தான். அவர்கள் சென்ற வருஷம் போர் புரிந்த க்ரேஸியானியின் வீரர்களைவிட மோசமாய்த்தானிருக்கிறார்கள்.

அமெரிக்க விமானங்கள் உதவி

பிரிட்டிஷ் விமானப் படைக்கும் அதனோடு சேர்ந்து வேலை செய்யும் குடியேற்ற நாட்டு விமானப் படைகளுக்கும் இதுவரை கிடைக்காத சந்தர்ப்பம் இப்போது லிபியப் போராட்டத்தால் கிடைத்திருக்கிறது என்று 'டெய்லி டெலக்ராபின்' விமான நிருபர் கூறுகிறார்: உதவிப் படைகள் மாதக் கணக்காக வந்து சேர்ந்துகொண்டே இருக்கின்றன. அவை கிரேட் பிரிட்டன், அமெரிக்கா இரண்டிலிருந்தும் வந்திருக்கின்றன. மேலும், அமெரிக்க விமானங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிவருகிறது. ஆகவே போராட்டம் ஆரம்பித்தபோது உண்மையில் ஒரு ஆங்கிலோ-அமெரிக்க விமானப் படைதான் தாக்குதலைத் தொடங்கிற்று. இதுவரை எப்போதும் இல்லாத அளவுக்கு இந்தச் சமயம் விமானப் படை பூரண முஸ்தீப்புடன் விளங்குகிறது. நேப்பிள்ஸை அடிக்கடி வெடி விமானங்கள் தாக்கி வந்திருக்கின்றன. திரிபோலியும், பெங்காசியும் ஒரு நாள் தப்பாது இரவில் தாக்கப்பட்டிருக்கின்றன. சில சமயங்களில் பகலிலும் தாக்குதல் நடந்திருக்கிறது.

லிபியப் போராட்டத்தின் முடிவைத் தீர்மானிப்பதில் இந்த விமானத் தாக்குதல் பெரிதும் உதவியாயிருக்கும். பிரிட்டிஷ் தாக்குதல் நல்லபடியே நடந்து அதன் பயனாய் எதிரியை வடக்காப்பிரிக்காவிலிருந்து வெளியேற்றி விட்டு நமது துருப்புகள் டானிஷிய எல்லையை அடைந்துவிடும் பட்சத்தில் மத்தியக்கீழ்த் திசையில் விமான நிலையில் பெரிதும் அபிவிருத்தி ஏற்பட்டுவிடும். அப்போது சிசிலியையும் தற்கு இத்தாலியையும் நேராக தாக்குவதற்கு சாதகமாய் தளங்கள் கையிலிருக்கும். சிசிலியையும் இத்தாலியையும் தாக்குவதற்கு பெங்காஸியே இப்போதுள்ளதைவிட மேலான தளமாய் உதவும். மால்டாவிலிருந்து அதற்கு 300 மைல் தூரந்தானிருக்கிறது. ஆனால் மால்டாவுக்கும் அலெக்ஸாண்டரியாவுக்குமிடையிலுள்ள தூரம் 820 மைலாகும்.

3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் ஓய்வெடுத்துக்கொண்டிருந்ததை விட்டுவிட்டு வாஷிங்டன் தலை நகரத்திற்கு மிக அவசரமாகத் திரும்பி வந்துவிட்டார். தூரக் கிழக்கு நாடாகிய இண்டோ-சீனாவில் ஜப்பான் மேலும் மேலும் கப்பற்படையையும், ஆகாயப்படையையும் இருந்தாப்போலிருந்து அதிகப்படுத்திக் கொண்டுவருவதுதான் இதற்கு காரணம். வாஷிங்டனிலுள்ள ஜப்பானிய பிரதிநிதிகளை, பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் ஜப்பான் துருப்புகளை திடீரென்று அதிகப்படுத்த வேண்டிய காரணம் என்னவென்று கேட்டிருக்கிறார். ஜப்பானிய சர்க்காரின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க கடற்படை மந்திரியாகிய கர்னல் பிராங்க் நாக்ஸ், அமெரிக்க கடற்படை அட்லாண்டிக் சமுத்திரத்திலும், பஸிபிக் சமுத்திரத்திலும் எந்த விதமான அவசரத்திற்கும் தயாராயிருக்கின்றது என்று தெரிவிக்கின்றார்.

4, ரஷ்யாவும், பின்லாந்தும்

ரஷ்யாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள ராஸ்டோவ் என்ற முக்கியமான தளம், ரஷ்யர்களால் திரும்பக் கைப்பற்றப்பட்டது. ஜெர்மன் துருப்புகள் இந்த யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டு புறமுதுகிட்டோடிவிட்டன. மேற்கே உள்ள மாரியபோல் என்ற இடத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றன. ரஷ்யத் துருப்புகள் அவைகளைத் துரத்திக்கொண்டு கிழக்கிலிருந்து செல்கின்றன. வடக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் ரஷ்யத் துருப்புகள் ஜெர்மன் பட்டாளத்தை வளைத்துக்கொள்ள முயற்சி செய்கின்றன. தெற்கில் அசோப் கடல் இருக்கிறது. ஒரு பையில் அகப்பட்டதுபோல ஜெர்மன் துருப்புகள் அகப்பட்டுக் கொண்டன.

ராஸ்டோப் வெற்றி ஒரு மகத்தான வெற்றி. இதைப் பாராட்டி, ரஷ்ய அரசாங்கத் தலைவர், மிஸ்டர் ஸ்டாலின், ரஷ்யப் படைத்தலைவர்களுக்கு ஒரு வாழ்த்துச்செய்தி அனுப்பியிருக்கிறார்.

மாஸ்கோவை நோக்கி எதிரிகள் முன்னேற முயற்சிசெய்துவருகிறார்கள்.

மாஸ்கோ பகுதியில், வாலோ கோலாம்ஸ்க், மொஜாயிஸ்க், டுலா, இவைதான் முக்கால்வாசி பாரத்தைத் தாங்குகின்றன. பீரங்கிப் படைகள், பாய்ச்சல் விமானங்கள் இவற்றின் தாக்குதலையடுத்து மீண்டும் மீண்டும் டாங்கிப் படைகள் காலாட்படைகளோடு சேர்ந்தாற்போல் தாக்கி வந்திருக்கின்றன. நேருக்கு நேரான சண்டை ஓயாது நடந்துவருகிறது.

இங்கே பிரதேசம் ஒன்றும் அதிகமாய்க் கைவிட்டுப் போய்விடவில்லை. ஜெர்மானியர் பிடித்துள்ள பிரதேசத்தை கஜக் கணக்கில்தான் சொல்லவேண்டுமேயொழிய மைல் கணக்கில் சொல்ல முடியாது. இந்தச் சொற்ப லாபத்துக்காக அவர்கள் அடைந்துள்ள நஷ்டமோ ஏராளமாயிருக்கிறது. இந்தப் பகுதியில் ஜெர்மானியர் மனமுடைந்து உயிருக்குத் துணிந்து போராடுகிறார்களே யொழிய, வெற்றி பெறுவோம் என்னும் நம்பிக்கையோடு போர் புரிவதாகத் தெரியவில்லை.

புதிய விமானம்

இப்போது புது மாதிரியான 'டாங்கி' எதிர்ப்பு விமானமொன்றை ரஷ்யர்கள் உபயோகித்துக் கொண்டு வருகிறார்கள். இதனால் பிரிட்டிஷ் விமானப்படையின் வேலைக்கு அனுகூலமான சில சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தப் புதிய 'டாங்கி' எதிர்ப்பு விமானம், பல யந்திர பீரங்கிக

ளமைந்து ; வேக மிகுந்த இரட்டை எஞ்சின் உடையது. இது சண்டை விமானமாகவும், பாய்ச்சல் வெடி விமானமாகவும், வேலை செய்கிறது. ரஷ்ய 'டாங்கி' எதிர்ப்பு விமானங்களின் ஒரு பிரிவு மூன்று மாதத்தில் எதிரிகளின் 608 'டாங்கி' களையும், 1,752 'லாரி' களையும் 25 கவச மோட்டார்களையும் அழித்துவிட்டதென்று தெரிகிறது.

ரஷ்ய சைன்யத்தைப்பற்றி, ஒரு யூகோஸ்லாவிய ராணுவத் தலைவர் பின்வருமாறு கூறுகிறார் :—

"ரஷ்ய சைன்யத்தைப்பற்றி நான் எப்போதுமே பிரமாதமாய்த்தான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். அவர்கள், எல்லாரையும், ரஷ்ய ராஜதந்திர வட்டாரங்களைக்கூட, திகைக்கவைத்துவிடுவார்கள் என்று மாஸ்கோவில் சொன்னேன். அயல்நாட்டு ராஜதந்திரிகளெல்லாம் ரஷ்யா முதல் மூன்று வாரத்திலேயே படுத்துவிடும் என்று கருதி வந்தார்கள். இருபது வருஷத்துக்கு முன்னே—சென்ற யுத்தத்தின் போது—சிறிது காலம் பழைய ரஷ்யச் சைன்னியத்தில் நான் ஒரு தலைவனாயிருந்தேன். அந்தக் காலத்தில் ரஷ்யச் சிப்பாய்கள் சரியானவர்களாயிருந்தார்கள். இன்று ரஷ்யச் சிப்பாயையோ ரஷ்ய அதிகாரியையோ, பார்த்தால் அவர்களுடைய பயிற்சியிலேற்பட்டுள்ள அபிவிருத்தி நன்கு விளங்குகிறது. தனித் தனியாய் ரஷ்யச் சிப்பாய்களை எடுத்துக்கொண்டால் ஜார் காலத்திலிருந்தவர்களுக்கு இப்போதுள்ளவர்கள் எவ்வளவோ மேலாயிருக்கிறார்கள்

"சோவியத் சைன்யாதிகாரிகளை எடுத்துக்கொண்டால், அவர்களுடைய திறமையைப்பற்றி என் சந்தேகப்படவேண்டுமென்பது எனக்குப் புரியவில்லை. நேசக் கட்சியைச் சேர்ந்த அனுபவமுள்ள வயதான ஜெனரல்களைவிட, இளைய ஜெர்மன் ஜெனரல்கள் நல்ல வேலை செய்கிறார்கள் என்றால், ரஷ்ய ஜெனரல்களைமட்டும் இளமைக் காரணமாக கழித்துத் தள்ளுவதேன்? இளமை என் ஜெர்மன் சைன்யத்தில் பெரிய அனுகூலமாயிருக்கவேண்டும்? ரஷ்ய சேனையில்மட்டும் பெரிய பிரதிகூலமாயிருக்கவேண்டும் ?

பிரெஞ்சுப் புரட்சிச் சைன்யம் பழைய ராணுவ சம்பிரதாயங்களையெல்லாம்விட்டு விட்டதனால் புதியதொரு யுத்த முறையையே கையாளுவது நெப்போலியனுக்குச் சாத்தியமாயிருந்தது என்பதை அவர் எடுத்துக் காட்டுகிறார். நெப்போலியன் விதிப்படி நடக்கவில்லை என்றுகூட அவருடைய எதிரிகள் புகார் செய்தார்கள்.

ஜெர்மனியினுடைய புதிய முறைகள் ரஷ்யாவில் பலிக்கவில்லை. ஸ்மோலென்ஸ்கை முதலில் தாக்கிய போது ஜெர்மானியர் புதிய முறைகளைத்தான் கையாண்டார்கள். அவை பலிக்காது போனதைக் கண்டு ஹிட்லர் திகைத்துப் போனார். யூகோஸ்லாவிய தலைவர் மேலும் கூறுவதாவது :—

"ரஷ்யர்கள் ஒரு புதுமாதிரியான தற்காப்புப் போராட்டத்தை நடத்துவார்களென்று ஜெர்மானியர் எதிர்பார்க்கவில்லை. ஆனால் ரஷ்யர்கள் அப்படிச் செய்துவிட்டார்கள். அதனால் மின்னல் போர் பலிக்காது போய்விட்டது. 60 மைலுக்கும் அதிகமான தூரத்திலிருந்தே தற்காப்புப் போர் புரிவது ஜெர்மானியருக்குக் கோபமூட்டிவிட்டது. அவர்களும் ஆஸ்டிரியர்கள், நெப்போலியனைப்பற்றி புகார் கூறியபடியே எதிரி விதிகளைக் கவனிக்கவில்லை என்று புகார் செய்தார்கள். மற்றச் சைன்யங்களென்றால் எப்போதோ ஆயுதங்களைப் போட்டுவிட்டுப் பணிந்திருப்பார்கள். அப்படிப்பட்ட நிலைமையில்தான் ரஷ்யச் சைன்யம் விடாது கடுமையாய்ப் போராடுகிறது."

நாஸி ஜெர்மனியைவிட பத்து வருஷகாலம் முன்னதாகவே ரஷ்யர் தன் சைன்யாதிகாரிகளைத் தயார் செய்துவிட்டதாயினும், பெருத்த அளவிலே ஆயுத உற்பத்தி செய்வதை 1939-ல் தான் ஆரம்பித்தது. பின்னடைவதிலுள்ள கஷ்டத்தை இந்தச் சைன்யம் ஐந்து மாத காலமாய்த் தாங்கி வருவது அதன் அளவற்ற உறுதியைத்தான் காட்டுகிறது. "ஜெர்மன் சைன்யம் மட்டும் இதேமாதிரி நிர்ப்பந்தத்துக்குள்ளாகியிருக்கும் பட்சத்தில், அப்படி அயல் நாட்டிலே நேர்ந்திருந்தாலுங்கூட, அது ஒன்றுக்குமுதவாமல் தளர்ந்து போய்விட்டிருக்கும்" என்று யூகோஸ்லாவிய நிபுணர் கூறுகிறார்.

5. பால்கன்ஸ், துருக்கி முதலியன.

கருங்கடலில் உள்ள விரோதி சப்மரீன்களையும் பொருட்படுத்தாமல், மூன்று ரஷ்ய கப்பல்கள், 25,000 டன் எடையுள்ள எண்ணெயை, துருக்கி துறைமுகத்தில் இறக்கியிருக்கின்றன. இதனால் துருக்கிக்கு ரஷ்யாவின் மேல் நல்ல அபிப்பிராயம் உண்டாயிருக்கிறது. அமெரிக்க வாடகை-கடன் சட்டத்தின் அனுகூலங்கள் துருக்கிக்கும் உண்டு என்று பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் தெரிவித்திருக்கிறார்.

6 கப்பல் நிலைமை.

ரஷ்யாவில், மூர்மான்ஸிக்கிற்குக் கொண்டுபோவதற்காக நாஸி துருப்புகளையும், சப்ளை சாமான்களையும், ஏற்றிச் சென்றுகொண்டிருந்த ஜெர்மன் கப்பல்கள், ஆர்க்டிக் கடலில் இரண்டு பிரிட்டிஷ் சப்-மரீன்களால் தாக்கப்பட்டன. 8 எதிரி கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன ; 4 கப்பல்கள் அநேகமாக மூழ்கியிருக்கும் ; 2 கப்பல்களுக்கு அதிக சேதம்.

மத்தியதரைக் கடலின் மத்தியில், எதிரியினுடைய ஒரு பெரிய வர்த்தகக் கப்பலை, பிரிட்டிஷ் விமானங்கள் கீழாகப் பறந்து தாக்கின. ஐந்து குண்டுகள்பட்டு கப்பல் புகையில் மூழ்கியது. ஏழு பிரிட்டிஷ் விமானங்கள் காணமற் போயின.

மத்தியதரைக்கடலில், அக்டோபர், நவம்பர் மாதங்களில் 33 எதிரிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன ; 14 கப்பல்கள் மூழ்கியிருக்கும் ; 21 கப்பல்களுக்கு அடி. ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் 38 எதிரிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன ; 21 அநேகமாக மூழ்கியிருக்கும் ; 12 கப்பல்களுக்கு அடி விழுந்திருக்கின்றது. சென்ற 120 தினங்களில் பிரிட்டிஷ் யுத்த கப்பல்களும், சப்மரீன்களும், ஆகாயப் படையும் வெற்றிகரமாக 139 தடவை எதிரிக் கப்பல்களைத் தாக்கியிருக்கின்றன.

7. தூரக் கிழக்கு அரங்கம்.

தூரக் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள நெருக்கடியான நிலைமையும், அமெரிக்க—ஜப்பானிய சமரசப் பேச்சுகளும், இந்த இதழில் வேறொரு பக்கத்தில் வெளியாயிருக்கும் ஒரு கட்டுரையில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

அமெரிக்காவுக்கு ஜப்பானியத் தூதராகச் சென்றிருக்கும் மிஸ்டர் குருசு "சாதிக்கப்போகும் காரியங்களை"ப்பற்றி, சீனாவில் இரண்டு விதமான அபிப்பிராயம் இருக்கிறது.

இரண்டு நாடுகளுக்கு மிடையே உண்மையான ஒரு ஒப்பந்தம் ஏற்படுமென்று சீன அதிகாரிகள் கருதவில்லை. ஏனெனில் தூரக் கிழக்கில் ஜப்பான் செய்துகொண்டிருக்கும் ஆக்ரமிப்பை அமெரிக்கா ஒப்புக்கொள்ளாது என்பது அவர்களின் நம்பிக்கை. ஆனால் அங்குள்ள வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்கள், ஏதோ தாற்காலிகமாகவோ, அல்லது பெயரளவிலேயோ, அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்குமிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்று கருதுகிறார்கள்.

ஆனால் ஒரு விஷயத்தை மறந்துவிடக்கூடாது. வாஷிங்டன் டோக்கியோவுடன் செய்துகொள்ளக் கூடிய எத்தகைய ஒப்பந்தமும் சீனர்களுக்குச் சற்று ஏமாற்றமாய்த்தானிருக்கும். ஏனெனில் ஜப்பானியர் ஆக்கிரமித்திருக்கும் பிரதேசங்களிலுள்ள எல்லா ஜப்பானியத் துருப்புகளும் வெளியேற்றப்படவேண்டுமென்று அவர்கள் கோறுகிறார்கள். ஆனால் இதே சமயம் அமெரிக்காவும் ஜப்பானும் தங்களுக்குள் உள்ள வித்தியாசங்களைத் தீர்த்துக்கொள்ள முயற்சிக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள். குறைந்த பட்சம் தாற்காலிகமாகவாவது, அமெரிக்காவோ, ஜப்பானோ யுத்தத்தில் மாட்டிக்கொள்ள விரும்பவில்லை. அதோடு ஜப்பான் மாத்திரம் சீன யுத்தத்தை நிறுத்தி, அச்சிலிருந்து விலகிக்கொள்ளும் பட்சத்தில் அமெரிக்காவும் பிரிட்டனும் ஜப்பானுக்கு, தொழிற்சாலை சாமான்கள், கப்பல் போக்குவரத்துகள் ஆகிய இவற்றுக்காக பெருத்த லாபம் தரத் தயாராயிருக்கின்றன. பார்க்கப் போனால் ஜப்பானும் இதை ஒப்புக்கொண்டால்தான் அது பொருளாதார நாசத்திலிருந்து தப்ப முடியும்.

ஜப்பான் அமெரிக்காவைப் பலமாக வாயால் தாக்குவது எல்லாம் தங்களுக்குச் சாதகமாக பேரம் பேசுவதற்காகத்தான் என்று ஜப்பானை நன்கு அறிந்தவர்கள் கூறுகிறார்கள். மிஸ்டர் குருசுவிடமிருந்து அமெரிக்காவும் சில கோரிக்கைகளை வற்புறுத்திப் பெற்றிருக்கிறது என்று இவர்கள் கூறுகிறார்கள்.

சீனாவுடன் வாதிக்கக்கூடிய கோரிக்கைகளையாவது பெறவேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் நோக்கம் என்று கூறப்படுகிறது. அமெரிக்க ஆதரவின் கீழ், சீனாவும், ஜப்பானும் தூரக் கிழக்கில் யுத்

தத்தை நிறுத்தி வைப்பது விஷயமாக ஒரு முடிவுக்கு வருமானால் மிகவும் நல்லது என்றும் கருதப்படுகிறது.

ஆனால் சீனாவின் பயத்தைப் போக்கும்படி அத்தனை கோரிக்கைகளை ஜப்பானிடம் வலியுறுத்துவதும் கஷ்டம் என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஜப்பானுக்குப் புத்தி புகட்ட அமெரிக்காவுக்குக் கிடைத்திருக்கும் கடைசி தருணம் இதுதான். இந்தக் கடமையில் தன்னாலானமட்டும் அமெரிக்கா பாடுபடும். அது வரையில் சீனர்கள் ஒன்றும் பேசாமல் தங்கள் கட்சியில் நியாயம் இருக்கிறது என்கிற தைரியத்துடன் இருக்கவேண்டும் என்று சீன அரசியல் வட்டாரங்கள் நினைக்கின்றன.

8. விஷி

மார்ஷல் பீத்தானும், அட்மிரல் தார்லானும் விஷியைவிட்டுப் புறப்பட்டு ஜெர்மன் ஆக்கிரமிப்பிலுள்ள பிரான்சில் ஹிட்லரைச் சந்தித்துப் பேசினார்கள். லிபியாவில், ஜெர்மன் ஜெனரல் ரோம்மெல் துருப்புகளுக்கு உதவியும் சப்ளைகளும் செய்வதற்காக, டுலான், பிசெர்ட்டா என்ற இடங்களிலுள்ள ஆகாய விமான தளங்களை ஜெர்மானியர்கள் உபயோகிக்க விஷி சர்க்கார் சம்மதித்திருக்கின்றனர். இந்த விஷயத்தில் அட்மிரல் தார்லானின் சிபார்சிற்கு மார்ஷல் பீத்தான் சம்மதித்து விட்டார்.

அமெரிக்காவில் வாஷிங்டன் நகரத்திலுள்ள விஷி சர்க்கார் ஸ்தானீகர், லெப்டினன்ட் சார்லஸ் ஹென்றி பிரான்சிற்குத் திரும்பிவர மறுத்துவிட்டார். அவர் தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டு அமெரிக்க ஆகாயப் படையில் சேர்ந்துவிட்டார். அவர் ஆகாய விமானம் ஓட்டுவதில் மிகவும் சாமர்த்தியமானவர்.

ஜெர்மன் ஆக்கிரமிப்பிலுள்ள பிரான்சில் ஜெர்மானியருக்கு எதிரிடையாக கிளர்ச்சிகள் நடந்து வருகின்றன. பாரிஸ் ஹோட்டல் டைனமைட் வெடிவைத்து சேதமாக்கப்பட்டது. இந்த கட்டடத்தில் நாஜிகள் வசித்துவந்தனர். 2 ஜெர்மன் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்; மற்றும் பலர் காயமடைந்தனர். இதனால் பாரிஸ் நகரத்தில் மான்ட்மார்ட்டி என்ற இடத்தில் யாரும் மாலை 6 மணிக்குப்பிறகு வெளியில் நடமாடக்கூடாதென்று ஜெர்மன் அதிகாரிகள் உத்தரவு போட்டிருக்கின்றனர். மாலை 6 மணிக்குப்பிறகு தெருக்களில் நடமாடுபவர்களைச் சுட்டுவிடும்படி நாஜிகள் உத்தரவிட்டிருக்கின்றனர்.

9. ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள்

ரஷ்யாவின் சில இடங்களை ஜெர்மானியர் பிடித்திருக்கின்றனர். கீவ் என்ற பட்டணத்திலிருந்து தப்பிவந்த ரஷ்யர் அங்கே நாஜிகளின் மிருகத்தன்மையைப்பற்றி விவரித்துக்கூறியிருக்கிறார். அந்த பட்டணத்திலுள்ள 52,000 ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோரையும் சில தினங்களில் நாஜிகள் கொன்று விட்டனர். ஜெர்மன் பப்ளிக் பிராசிக்யூடர் வசித்துவந்த வீடு வெடி மருந்தால் இடிந்து விழுந்தது. 170 ஜெர்மன் ஆபீசர்களும், ஜெர்மன் ரகசிய போலிசைச் சேர்ந்த கெஸ்டாபோ ஏஜெண்டுகளும் கொல்லப்பட்டனர். நாஜிகள் முதல் 100 ரஷ்யர்களைக் கைதியாக்கி ஒரு இடத்தில் குழிவெட்டி அதில் மருந்துவைத்து இவர்களைத் தள்ளி தீவைத்துவிட்டார்கள். 30 அல்லது 40 ரஷ்யர்களை, வெடித்த பிரேதத் துண்டுகளைப் பொறுக்க அனுமதி கொடுத்துப் பிறகு அவர்களையும் நாஜிகள் சுட்டுக்கொன்றுவிட்டனர்.

10. நடு நிலைமை நாடுகள்.

தாய்லாந்து :—தாய்லாந்தின் தலை நகரமாகிய பாங்காக்கில் நிலைமை சாதாரணமாயிருந்தபோதிலும், பொது மக்கள் உள்ளத்தில் யுத்தத்தைப் பற்றிய எண்ணமே குடிகொண்டிருக்கின்றது. இது வரையில் நெற் பயிர் விளைவைப்பற்றியே கவனமாயிருந்த குடியானவர்கள் திடீரென்று தங்களால் தடுக்கமுடியாதபடி, யுத்தம் தங்களையும் நெருங்கி வருவதைக்கண்டு திகைக்கின்றார்கள். ஜப்பானியர் தாய்லாந்திற்குள் பிரவேசித்து விட்டார்களென்ற செய்தி ஆதாரமற்றதாயிருக்கின்றது.

இண்டோ-சீனாவில் ஜப்பானியர்கள் யுத்த முஸ்தீப்பு செய்துகொண்டே இருக்கிறார்கள். தூரக்கிழக்கு அரங்கத்தில் யுத்தம் வந்தால் இண்டோ-சீனா நடுநிலைமை வகிக்கும். ஜப்பானியர் இண்டோ-சீனாவிலிருந்து யுத்தம் செய்தால், இண்டோ-சீனாவின் நடுநிலைமையால் பிரயோசனமில்லை. அது அதனுடைய சொத்தையும் காப்பாற்றிக்கொள்ள முடியாது.

தென்-அமெரிக்காவிலுள்ள டச்சு கையானா நாட்டினுள் பாக்சைட் சுரங்கங்களை பாதுகாப்பதற்காக யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து துருப்புகள் போயிருக்கின்றன. டச்சு சர்க்காரின் வேண்டுகோளின்பேரில் துருப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

வட ஆப்பிரிக்காவில் உள்ள மொராக்கோ நாட்டில் ஜெர்மன் கங்காணிகள் பெருவாரியாக இருக்கின்றனர். ஜெர்மன் சப்மரீன்கள், மொராக்கோ கடற்கரை யோரத்தில், இரகசியமான விடங்களில், சப்ளைகள் பெற்று வருகின்றன என்று கூறப்படுகிறது.

குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றன்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.
[சென்னை இன்பர்மேஷன் ஆபீஸர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.